# கோபி கிருஷ்ணனின் புனைவுகளும் மனவுலகின் முடிவற்ற வெளிகளும்

ந. முருகேசபாண்டியன்

புனைவு எழுத்தின் முடிவற்ற சாத்தியங்கள் வெளிப்படுகிற உலகில் மனிதர்களின் இருப்புக் குறித்த பேச்சுகள் தனித்துவமானவை. ஒருபோதும் கற்பனைக்கெட்டாத சம்பவங்களின் வழியாகப் படைப்பாளர் சித்திரிக்க முயலுகிற பதிவுகள்தான் புனைவெழுத்துகளின் ஆதாரம். நினைவுகளின் வழியாகக் கடந்த காலத்தில் பயணிக்கிற படைப்பாளியின் மனம் புனைகிற சம்பவங்களின் கோர்வையில் முடிவிலியாகக் கதைகள் பிறக்கின்றன. புறச்சூழல் சார்ந்த அனுபவங்கள் ஒருபுறம், மனதின் இடுக்குகளில் கசிந்திடும் வெக்கையான உணர்வுகள் இன்னொருபுறம் வலுவாக உள்ளன. கதை தொடர்ந்து உருவாக்கிடும் புறவெளியில் சஞ்சரிக்கிற பயணியான வாசகனும் தனக்கான கதையைக் கட்டமைத்திட முயலுவது, புனைவெழுத்தின் சாத்தியத்தை விரிவுபடுத்துகிறது. அகத்தை முன்வைத்துத் தமிழ்ச் சிறுகதைப் பரப்பில் தனக்கான இடத்தை எழுத்தின் வழியாக அழுத்தமாக நிறுவியுள்ள கோபிகிருஷ்ணன், புதிய போக்கினை உருவாக்கியுள்ளார். மதுரையில் 1945-ஆம் ஆண்டில் பிறந்தவரான கோபிகிருஷ்ணன், 1983 ஆம் ஆண்டு முதலாகச் சிறுகதைகள், குறுநாவல்கள் என இருபது ஆண்டுகள் தொடர்ந்து எழுதியுள்ளார். இவருடைய முதல் சிறுகதைத் தொகுப்பான 'ஒவ்வாத உணர்வுகள்' 1986-இல் வெளியானபோது சிறுபத்திரிகை வட்டாரத்தில் பெரிதும் கவனிப்பிற்குள்ளானது. இவருடைய நான்கு சிறுகதைத் தொகுப்புகள், மூன்று குறுநாவல் தொகுப்புகள் பிரசுரமாகியுள்ளன. கோபி சித்திரிக்க விழைந்துள்ள புனைவுகள், தமிழ்ச் சிறுகதை மரபில் வழமையில் இருந்து விலகி, மாறுபட்ட தருணங்களைப் பதிவாகியுள்ளன. நவீனமான மனித மனதின் மறுபக்கத்தை உளவியல்ரீதியில் கேள்விக்குள்ளாக்கிடும் கோபியின் புனைகதைகள், 2003-ஆம் ஆண்டில் அவருடைய மறைவினுக்குப் பின்னரும் பேசுபொருளாகத் தனித்து விளங்குகின்றன.

சென்னை மாநகரில் வசிக்க நேர்ந்த பொருளியல்ரீதியில் பலவீனமான நடுத்தர வர்க்கத்து ஆணின் இருப்பினை மையமாகக்கொண்டு விரிந்துள்ள கோபியின் பெரும்பாலான கதைகள், தனிமனிதனின் வலியையும் துயரத்தையும் பேசுகின்றன. சுழலுடன் பொருந்திப் போகவியலாமல் தவிக்கிறவனின் பரிதவிப்புகள் எனவும் கோபியின் கதைகளை வாசிக்கலாம். பொதுவாகப் படைப்பாளிக்கும் படைப்புகளுக்குமான ஒட்டுதல் அல்லது உறவு குறித்து அக்கறைகொள்ள வேண்டியது இல்லை என்ற பின்நவீனத்துவம் வலியுறுத்துகிற வாசிப்புமுறை, கோபிக்குப் பொருந்தாது. கோபி தன்னுடைய மனம், வாழ்க்கை குறித்து வெளிப்படையாகப் படைப்புகளின் வழியாக நிர்வாணப்படுத்தியுள்ளார். இதனால் இலக்கிய வெளியில் எழுத்தாளர் என்று உருவாக்கப்படுகிற புனைவுகளுக்கு அப்பால் தனித்து விளங்குகிறார்.

கோபி காத்திரமாக எழுதிய இருபது ஆண்டுகளில் பதினேழு நிறுவனங்களில் பணியாற்றியிருக்கிறார். ஒண்டுக் குடித்தனம் முதலாக வசதிக் குறைவான பல வீடுகளில் தனித்தும் குடும்பத்துடனும் வாழ்ந்திருக்கிறார். பதின்பருவம் தொடங்கிக் கல்லூரி

வாழ்க்கையிலும் போதுமான உணவு உண்பதற்கு வழியற்று வறுமையில் சிரமபட்டிருக்கிறார். அவருடைய முதல் திருமணம் கசப்பான அனுபவங்களுடன் மணவிலக்கிற்குள்ளானது. அவர் எப்பொழுதும் பொருளாதார வளமின்றி, நண்பர்களின் ஆதரவினால், பல்வேறு வேலைகள் பார்க்க வேண்டிய நெருக்கடிக்குள்ளாகியிருந்தார். ஒருவிதமான அந்நியமான மனநிலையுடன் தன்னையே வதைக்குள்ளாக்கிக்கொண்ட கோபியின் வாழ்க்கை எப்பொழுதும் அமைதியற்று இருந்தது. மனச்சோர்வின் பிடியில் சிக்குண்ட அவர் இரண்டு முறைகள் தற்கொலை செய்துகொள்வதற்காக அதிகமான தூக்க மாத்திரைகளை விழுங்கி, மருத்துவர்களின் கவனிப்பினால் மரணத்தின் பிடியில் இருந்து தப்பியிருக்கிறார். ’ஒன்பது மாதம் முன்பு, தொடர்ந்து மூன்று வாரங்கள் சுயநினைவில்லாமல் இயங்கிக்கொண்டிருக்கிறேன். டாக்டர் சாரதா மேனன் மூன்று வாரங்கள் உங்கள் மெமரி இரேஸ் ஆகியிருந்தது என்றார்கள். இது எப்படி நடந்தது, என்ன காரணமென்று தெரியவில்லை.’ என்ற கோபியின் வாக்குமூலம் சாதாரணமானது அல்ல. கோபியின் எழுத்துகளுக்கும் அவருடைய வாழ்க்கைக்கும் இடையில் பிரிக்கவியலாத உறவு அழுத்தமாகப் பொதிந்துள்ளது. நினைவுப்புலத்தில் ஊசலாடுகிற கோபியின் மனம் புனைந்திட்ட படைப்புகள் மேலோட்டமாகச் சுய எள்ளலுடன் விரிந்தாலும், ஆழத்தில் முடிவற்ற இருப்பின் துயரம் கொப்பளிக்கிறது.

’மனநோய் என்பது பிறிதொரு மனநிலை. சிகிச்சை தேவையென்றாலும் அது துர்பாக்கியமோ, துரதிர்ஷ்டமோ அல்ல. நோய்க்குறிகளை அனுகூலமாகப் பயன்படுத்திக்கொள்ள ஒரு வரப்பிரதசாகவும் அமைய வாய்ப்புண்டு’ எனக் கோபிகிருஷ்ணன் குறிப்பிடுவது கவனத்திற்குரியது. யாருக்கு வேண்டுமானாலும் எந்த நேரத்திலும் மனப்பிறழ்வு ஏற்படுவதற்கான சாத்தியமிருக்கிற நிலையில், எது துல்லியம் என்ற கேள்வி தோன்றுகிறது. மனநோயினால் பாதிப்பிற்குள்ளாகி வெளிப்படையான பாதிப்பிற்குளானவர், யதார்த்தச் சமூகத்தை எங்ஙனம் அணுகிறார் என்பது முக்கியமானது. படைப்பு என்பது ஒருவகையில் பித்து மனநிலை சார்ந்தது என்ற கருத்து நிலவுகிற சூழலில், கோபி தனக்கேற்பட்டிருந்த மனப்பிறழ்வைத் தனது படைப்புலகைக் கட்டமைப்பதற்காக மாற்றியமைத்துள்ளார். மனநோயாளி பற்றி எழுதுவது வேறு, மனநோயினால் பாதிப்பிற்குள்ளான நிலையில் காட்டாற்று வெள்ளம் போல நினைவின் அடுக்குக்குகளில் இருந்து கதைசொல்வது வேறு என்ற நிலையில், கோபியின் எழுத்துகள் ஒப்பீடு அற்றவை.

’என் எண்ணங்களை, அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்காகத்தான் எழுதுகிறேன். எனக்கு வாழ்க்கை இப்படி இம்மாதிரி அமைந்திருக்கிறது. உங்களுக்கு எப்படி … என்பது போலத்தான்.’ என்ற கோபியின் கூற்று, சூழல் மீதான அவருடைய எதிர்வினையைக் காட்டுகிறது. கோபியின் பெரும்பான்மையான கதைகளில் வருகிற கதைசொல்லி ஒருவர்தான். சோதனை முயற்சி மூலம் வேறுபட்ட வடிவங்களில் கதை சொல்வதில் ஆர்வமற்ற கோபி, தன்னைச் சுற்றிலும் நடைபெறுகிற சம்பவங்களைப் பதிவாக்குவதில் ஆர்வத்துடன் முனைந்துள்ளார். மனசோர்வினுக்குள்ளான நிலையில், கட்டுப்படுத்த முடியாமல் தோன்றுகிற தாறுமாறான எண்ணங்களினால் தொடர்ந்து பதற்றமுற்றிருக்கிறவன் எப்படியெல்லாம் இயங்குகிறான்; யோசிக்கிறான் என்றும் கோபியின் கதைகளை வாசிக்க முடியும். புலன்கள் உருவாக்கிடும் கொண்டாட்டத்தைத் தொலைத்துவிட்டு, எப்பொழுதும் அகரீதியில் ஒடுங்கியிருக்கிற நிலை, கோபியின் புனைவுலகக் கதைமாந்தர்களுக்கு ஏற்படுவது ஒருவகையில் துரதிர்ஷ்டம்தான். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் செயல்படுகிற இன்னொரு மனிதனின் குரல் எப்பொழுதும் முரணை

உருவாக்கினாலும், பெரும்பாலானோர், மனதின் மீதான ஆளுகை காரணமாகச் செயல்படுவதனால், நடப்பியலுடன் பொருந்திப் போகின்றனர். கோபி case study போல எழுதியிருக்கிற கதைகளில் பல்வேறுபட்ட மனிதர்களின் ஆழ்மனதின் குரல்களைக் கேட்க முடிகிறது. அன்பு, காதல், தாய்மை, வீரம், தியாகம், நட்பு போன்ற சொற்களைப் புனிதப்படுத்திச் சமூகம், சராசரி மனிதனிடம் ஏற்படுத்தியிருக்கிற உணர்வுகள், ஒரு நிலையில் அலுப்பானவை. இதிலிருந்து விடுபட முயலுகிற மனித முயற்சிகளுக்கு அப்பால், அலுப்பை அப்படியே ஏற்றுக்கொண்டு பதிவாக்கிட முயன்றுள்ளன கோபியின் வெள்ளந்தியான படைப்புகள். அலுப்பின் மறுதலையாகப் பகடியும் சுய எள்ளலும் சார்ந்த கலவையில் எழுதுகிற கோபி, குழப்பமான சூழலிலும் தனது இருப்பினை வலுவாக நிறுவியுள்ளார்.

சென்னை மாநகரில் பல்வேறு நிறுவனங்களில் வேறுபட்ட மனிதர்களுடன் பொருளியல் தேவைக்காக வாழ நேர்ந்திட்ட கோபி, அலுவலக நடைமுறையில் மேல் கீழ் என்ற முரணில் அதிகாரம் செலுத்தப்படுவதைக் கடுமையான மனச்சிக்கலுடன் எதிர்கொண்டார். இதனால் நிறுவனங்களில் வேலை பார்ப்பது பிரச்சினைக்குரியதாக இருக்கிறது என ஆதங்கப்படுகிற கோபி, நடப்புச் சூழலுடன் பொருந்திப் போக முடியாமல் தத்தளிக்கிறார். அலுவலகத்தில் சகஅலுவலர்களுடன் முரண்படுவது போவது ஒருபுறம், மேலடுக்கில் மொட்டை அதிகாரம் செலுத்துகிறவர்களின் ஆதிக்கம் இன்னொருபுறம் என வெறுப்படைகிறவனின் குரல், கோபியின் கதைகளில் அழுத்தமாக வெளிப்பட்டுள்ளது. நானூறு ரூபாய் ஊதியத்தில் வேண்டா வெறுப்பாகத் தட்டச்சராக வேலை செய்கிறவனிடம், வயதான முதலாளி, பிராமணர் சாதியைச் சார்ந்த, 19- 22 வயதுக்குள் திருமணம் ஆகாத லட்சுமிகரமாக அழகான பெண் அழைத்து வருமாறு சொல்கிறார். கதைசொல்லி எனக்கும் லட்சுமியைப் பார்க்க சபலமாக இருக்கிறது என்கிறவர், தேவதைகள் தட்டச்சு செய்வார்களா என்ன ஆச்சரியத்துடன் கேட்கிறார். தேவதைகள் விண்ணப்பிக்கலாம் என்ற தலைப்பிலான கதை, முதலாளியின் சபலத்தைக் கேலியாக விமர்சிப்பதுடன், பெண் மீதான பாலியல் மேலாதிக்கச் சூழலைச் சித்திரித்துள்ளது.

கோபி சமூகப்பணித் துறையில் பல்லாண்டுகள் பணியாற்றிய அனுபவங்களைப் பின்புலமாகக்கொண்டு அவ்வப்போது கதைகள் எழுதியுள்ளார். வர்க்கம், கருத்தரங்கில் கணக்கில் கொள்ளப்பட்டவை போன்ற சமூகப்பணியைக் கருவாகக்கொண்ட கதைகள், பின்னர் இடாகினிப் பேய்களும் நடைப்பிணங்களும் சில உதிரி இடைத்தரகர்களும் என்ற பெயரில் குறுநாவலாக விரிவாக்கமாகியுள்ளன. வெளி நாட்டு நிதியுதவி பெற்று நடத்தப்படுகிற சமூகத் தொண்டு நிறுவனங்களின் நடப்பு நிலையை விவரித்திடும் கதையில், அலுவலர்கள் படுகிற பாடுகள் கதைகளாகியுள்ளன. மக்களுக்குச் சேவை செய்வதற்காகத் தொடங்கப்பட்ட தொண்டு நிறுவனங்களின் சுரண்டல், உயர்நிலை அலுவலர்களின் ஆதிக்கச் செயல்பாடு என விவரிக்கிற கதைகள், நுட்பமான முறையில் பிரச்சைனைகளைப் பதிவாக்கியுள்ளன. சமூகப் பணியில் கறுப்பு ஆடுகள் நுழைந்து விட்டன என ஆதங்கப்படுகிற கோபி, எல்லா சேவை மையங்களும் யாரோ சிலர் பிழைப்பதற்காக செயல்படுகின்றன என்ற பெரியாரின் கருத்தியலுடன் உடன்படுகிறார். பெரிய வளாகத்தில் இருக்கிற விசாலமான சேவை மையத்தில் நிறைய ப்ராஜெக்ட்கள் இருக்கின்றன. அங்கு பணியாற்றுகிற பலதரப்பட்ட ஆண்கள், பெண்கள் பற்றிய விவரிப்புகள், கோபியின் படைப்பாற்றலால் கோட்டோவியம் போலப் பதிவாகியுள்ளன. ஆங்கிலப் புலமை,

திறமையாகக் கோப்பு எழுதுதல், எல்லோருக்கும் உதவி செய்தல், அற்பத்தனத்தினால் எரிச்சலடைதல், சக பெண் அலுவலர்கள் மீது மெல்லிய அணுகுமுறை, பயனாளர்களுக்குக் கூடிய மட்டிலும் உதவிட முயலுதல் எனக் கதைசொல்லியின் இயல்புகள் கதை முழுக்கப் பதிவாகியுள்ளன. அடித்தட்டு அலுவலரிடம் நெருக்கமாக உணர்ந்திடும் வேளையில், ப்ராஜெக்டின் இயக்குநர்களான மேல்தட்டினரின் ஆடம்பரம், மேனாமினுக்கித்தனம் குறித்து எரிச்சலுடன் விரிந்திடும் குறுநாவல், இதுவரை தமிழில் யாரும் முயற்சிக்காத வெளிகளைப் பதிவாக்கியுள்ளது. சமூகப் பணி என்ற பெயரில் முகப்பூச்சுடன் வருகிற உயர்வர்க்க மூதாட்டிகள், பணியாற்றுகிற அலுவலர்களை மட்டமாகக் கருதுகின்றனர். அலுவலகத்தில் கழிவறைகளைக்கூட அலுவலர்களின் பணிநிலைக்கேற்ப பிரித்திடும் செயல், கதைசொல்லிக்குக் கோபத்தை ஏற்படுத்துகிறது. ‘’மேடம் உள் பாத்ரூமில் பன்னீரா பெய்யுறாங்க” என்ற கீழ்நிலைப் பணியாளர் சொல்வது, எரிச்சலின் வெளிப்பாடு. வெளிநாடுகளில் இருந்து நிறுவனங்கள் அல்லது தனியாரிடம் இருந்து பெறுகிற நிதியுதவிகளை விளிம்புநிலையினருக்கு வழங்கிட முயலுகிற தொண்டு நிறுவனங்களில் தொடர்ந்து பணியாற்றிய அனுபவங்களின் பின்புலத்தில்இ கோபி விவரிக்கிற சம்பவங்கள் சுவராசியமானவை.

தொண்டு நிறுவனத்தில் சமூகப் பணியாளராகச் செயல்படும் கண்ணுச்சாமி, மனநலம் தொடர்பான கருத்தரங்குகளுக்குச் செல்வதில் ஆர்வமுடையவர். கருத்தரங்கில் வழங்கப்படுகிற பிரியாணி, மேரி பிஸ்கட், தேநீர், வழவழா விரிவுரைகள், குழு விவாதங்கள். அவற்றுக்கப்பால் ஏதோவொரு முக்கியமான விஷயம் நிகழ்வதான பாவனை எனக் கழிந்திடும்பொழுதில், கண்ணுச்சாமி வெற்றிக்கொடியை மனவெளியில் பறக்க விடுகிறார். பங்கேற்பாளர்களுக்கு இடையிலான பரஸ்பர உரையாடல்கூட இயல்பற்றதான சூழலில் தன்னிருப்பை அந்நியமாகக் கருதுகிற கண்ணுச்சாமி இறுதியில் கன்னீகா ஸ்தீரிகளால் புதைக்கப்பட்டது என்ற புனைவு, கதையின் யதார்த்தத் தளத்தை மாற்றுகிறது.

’ஆயிரம் உண்டு’ என்ற கதையில் மதங்களின் பெயரில் மனிதர்கள் செய்கிற அக்கிரமங்களைக் கேலியாகவும் விமர்சிக்கிற கதைசொல்லியுடன் சேர்ந்து, வாசகனும் அருவருப்படைய நேரிடுகிறது. மனித வாழ்வில் அபத்தங்களுக்கு அளவில்லை என்பதை நிரூபிக்கிறவகையில் விவரிக்கப்பட்டுள்ள சம்பவங்கள், எழுப்புகிற கேளள்விகள் முக்கியமானவை. கிறிஸ்தவரான பெரியவர் பேசுகிறபோது ‘பணம் என்ற சாத்தானையும் பரமண்டலத்தில் இருக்கிற பிதாவையும் ஒரே சமயத்தில் வணங்க முடியாது’ என்ற விவிலிய வாசகம், கதைசொல்லிக்கு மட்டும் தோன்றவில்லை வாசகனுக்கும்தான். எல்லா மதங்களும் அன்றாட வாழ்க்கைக்கு முரணானவை என்பதில் கோபிக்கு திடமான நம்பிக்கை. ’கஞ்சா, அபின், பெதடின்-இந்து மதம், கிறித்தவ மதம், இஸ்லாமிய மதம், போதையில்தான் என்ன சுகம்!’. இயேசு சீக்கிரம் பூமிக்கு வருவதற்குப் பதிலாகப் பரலோக சாம்ராஜ்ஜியத்தில் நிம்மதியாக ஓய்வெடுத்துக் கொண்டிருப்பது உசிதம் என்ற கதைசொல்லியின் கிண்டலில் வெளிப்படுவது கோபியின் பேச்சுதான்.

சென்னை மாநகரில் சராசரியான குடும்பத்தினர் தங்கியிருந்து வாழ்ந்திடுவதற்கான வீடு குறித்த கோபியின் விருப்பு வெறுப்பற்ற பார்வை, ’காணி நிலம் வேண்டும்’ என்ற கதையில் நுட்பமாகப் பதிவாகியுள்ளது. இப்படியெல்லாம் நடக்கிறதா என்ற சந்தேகம் சிலருக்கு வாசிப்பில் தோன்றலாம் எனக் கருதிய கோபி கதையின் இறுதியில் பின்குறிப்பு தந்துள்ளார். குடும்ப உறவில் கணவன் - மனைவிக்கு இடையிலான உறவில் ஏற்படுகிற வெறுமையைப்

பற்றிய கோபியின் விவரிப்புகள் முக்கியமானவை. வாழ்க்கையே பிரச்சினை, பிரச்சினையே வாழ்க்கை என்ற நிலையில் இயலாமையில் சலிப்பும் அலுப்பும் ஏற்படுகின்றன. வெறுமனே வருத்தம், எரிச்சல், குழப்பம், கையாலாகாத்தனம், சுய இரக்கம், பைத்தியம் எல்லாம் ஒட்டுமொத்தமாகப் பிடித்து நடுத்தெருவுக்கு வந்து சிறிது ஆசுவாசம் தேடுகிற நண்பன் எனக் கோபி சித்திரிப்பது, பிரச்சினையின் இன்னொரு முகம்தான். ஓண்டுக் குடித்தனமாகப் பலர் குடியிருக்கிற வீடுகளில் குடியிருப்பவர்கள் துவைத்த துணிகளைப் பொதுவாக மொட்டை மாடியில் காயப் போடுவது வழக்கம். வீட்டு உரிமையாளரான பெண்ணின் மகனுடைய பச்சை வண்ண ஜட்டி காணாமல் போனபோது, ‘இருக்கிற ஆம்பிளங்க லுங்கியத் தூக்கியா பார்க்க முடியும் என எரிச்சலுடன் சொல்கிறார். ’மிகவும் பச்சையான வாழ்க்கை’ எனத் தலைப்பிட்டுள்ள அளவில் சிறிய கதையில் வாடகை வீட்டில் குடியிருக்கிறவன் எதிர்கொள்கிற அவலமும் ஆதங்கமும் பகடியுடன் வெளிப்பட்டுள்ளன..

கோபியின் பாலியல் பற்றிய புனைவுகள், எவ்விதமான ஒப்பனைகளும் இன்றி, வேட்கையால் தவிக்கிற உடலின் வதைகளைப் பதிவாக்கியுள்ளன. கதைசொல்லி மதுரையில் பாட்டியின் கண்டிப்பான வளர்ப்பின் காரணமாக வீட்டிற்கு வரும் பெண்களை ஏதாவது உறவுச் சொற்களைச் சொல்ல வேண்டிய நிர்பந்தத்தில் வளர்ந்தவர். அழகிய இளம் பெண்ணைப் பார்த்தவுடன் ஆணுக்கு இயற்கையாக ஏற்படுகிற அழகுணர்ச்சியைப் பஞ்சமாபாதங்களில் ஒன்று என்ற குற்ற உணர்வை ஏற்படுத்திய பின்புலம் காரணமாகத் தவிக்கிறார். மாநிலக் கல்லூரி மாணவரான கதைசொல்லிக்கும் சகமாணவியான ரோஸியுடன் ஏற்பட்ட நெருக்கம், காதல் உணர்வு பற்றி சுவராசியமாகச் சொல்கிற கதையின் கடைசி வரி, எதிர்பாராத ஒன்று. முதன்முதலாக ஏற்பட்ட காதலின் வீழ்ச்சியைச் சாதாரணமாகச் சொல்லிடக் கோபியால் மட்டும்தான் முடியும். ’இனிமையான வக்கிரம்’ கதையில் 32 வயதானவருக்கும் 22 வயதான இளம் பெண்ணுக்கும் இடையில் daddy- child உறவு ஏற்படுகிறது. குமார் என்ற பையன் தொடங்கி சுந்தர், ரமேஷ் என அவளுடைய ஆண் நண்பர்கள் பெருகின்றனர். அவள் இயல்பாக ஆண்களுடான பாலுறவை எடுத்துக்கொள்ள daddy மனம் குமைகிறார். எந்த இடத்திலும் அவள் மீதான ஈர்ப்பினைச் சொல்லிடாத daddyயின் ஆழ் மனதில் பொங்குகிற காமம்தான் கதையின் மையம். குறுக்கீடு, அன்பான வனதேவதைக்கு, சிதைந்த நிலையில் ஒரு சிநேகிதிக்கு ஆகிய மூன்று புனைவுகளும் காமம் அல்லது பாலியல் வேட்கைக்குள்ளான உடல்களின் வாயிலாக மனதின் தேடலை முன்னிலைப்படுத்துகின்றன. ’புருஷனோட சந்தோஷமா இருந்து ரொம்ப நாளாச்சி’ எனக் குறுக்கீடு புனைகதையின் கதைசொல்லியான பெண்ணின் குரல், ஒடுக்கப்பட்ட பெண்ணுடலின் வெளிப்பாடு. இப்படியெல்லாம் நடக்கின்றனவா என்ற கனவான்களின் கேள்விகளுக்கு அப்பால், நிலைமை இன்னும் மோசமாகிக்கொண்டிருக்கிறது எனபதுதான் கோபி புனைவுகளின் மூலம் சொல்கிற பதிலாக இருக்கும்.

பாரம்பரியமான மதிப்பீடுகளை முன்னிறுத்துகிற தமிழர் வாழ்க்கையில் பாலியல் என்ற செக்ஸ் பேசாப்பொருள்தான். பாலுறவைக் குற்ற மனதுடன் தொடர்புபடுத்தி, புலன்களை ஒடுக்குவதை விண்ணுலகிற்குப் போவதற்கான வழிமுறையாகச் சித்திரிக்கிற மதங்களின் ஆதிக்கம் வலுத்துள்ள தமிழ்ச் சமூகத்தில், விலக்குகள் அதிகம். இதுவரை தமிழ்ச் சமூகம் பாவம் என்றும் அதைப் பொதுவெளியில் பேசுவதற்கு அஞ்சி ஒடுக்கியதோ, அதைப் பற்றிய கோபியின் எழுத்து, தங்குதடையின்றி டேபிள் டென்னிஸ் என்ற குறுநாவலாகியுள்ளது. கட்டற்றுப் பெரு வெளியெங்கும் மிதக்கிற சொற்கள், அங்குமிங்கும் டேபிள் டென்னிஸ்

பந்தாகப் பாய்ந்தோடுகின்றன பாலுணர்வுக் காட்சிகள், சம்பவங்கள் மனப்பதிவாகப் பதிவாகியுள்ளன. உடல்களின் கூடல், மனதின் கட்டற்ற பாலியல் வேட்கை எனக் கோபி சித்திரித்துள்ளவை, தமிழ்க் கதைசொல்லலில் நிலவுகிற இறுக்கமான மதிப்பீடுகளைச் சிதலமாக்குகின்றன. மரபு, பண்பாடு, புனிதம், மதம் எனப் பல்வேறு வழிகளில் அடக்கியொடுக்கப்பட்ட பாலுணர்வு, பீறியடிக்கும்போது, காமவேட்கை மனவெளியில் டென்னிஸ் பந்தாக அலைகிறது. காமம் ஒவ்வொரு உடலுக்குள்ளும் பால் பேதமற்றுக் கொப்பளிப்பதைக் கோபி அழகியலுடன் பதிவாக்கியுள்ளார். உடல்ரீதியான பாலியல் பரவசங்களும் கொண்டாட்டங்களும் இயற்கையானவை என்ற புரிதலற்ற நிலையில், ஒத்த கருத்துடைய ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான உடலுறவு பற்றியும் கேள்விகள் எழும்புகின்றன. பொதுவாக வரன்முறையற்ற காம எழுச்சி, உடலுறவு விழைவு குறித்து மனவக்கிரம் என ஒதுக்கப்படுகிற பாலியல் பற்றிய விவரணைகளைத் தொடர்ச்சியறு முறையில் கதைகளாக்கியுள்ள கோபியின் எழுத்து பதிவாக்கியுள்ள உலகம், இன்றைய டிஜிட்டல் உலகில் மிதக்கிற இளைய தலைமுறையினருக்கு நெருக்கமானது. பாலியல் என்பது மனித இருப்பின் ஆதாரம் என்ற நிலையில் வெறுமனே பம்மாத்து, பாசாங்கு செய்து, எதுவும் நடக்காததது போல நடந்திடும் போலியான மனிதர்களுக்குக் கோபியின் பாலியல் புனைவுகள் அதிர்ச்சியை அளித்திடும்.

கோபியின் மனச்சிக்கலுக்குள்ளான சில கதாபாத்திரங்கள் பீடியை ஆர்வத்துடன் புகைக்கின்றனர். புகைத்தல் என்பது, மனம் பிரச்சினையின் வெக்கையினால் தவிக்கும்போது, ஆறுதலளிப்பதான நம்பிக்கையினால்தான் பலரும் புகைக்கும் பழக்கத்திற்கு அடிமையாகின்றனர். 'போதை' கதையில் கதைசொல்லி nicotine அடிமையாவது பயங்கரம் என்கிறான். தேநீருடன் சிகரெட் எனப் பழகியவன் எப்பொழுதும் புகைப்பதற்கான காரணங்கள் தொடர்கின்றன. ரேசன் கடையில் தற்செயலாக எதிர்கொண்ட பெண்ணின் பார்வை ஏற்படுத்திய உணர்வுகள் அளவற்றுப் பொங்குகின்றன. அவள் ஏக்கமான பார்வையுடன் பிரிந்து போன பின்னர் பீடி, டீ மட்டுமின்றி, அந்தப் பெண்ணும் அன்றைக்கு எனக்கு லாகிரியாகி விட்டிருந்தாள் எனக் கண்ணயர்ந்திடும் வேளையில் கதைசொல்லி நினைப்பது, தற்செயலானது அல்ல. காலங்காலமாக மனிதர்கள் போதையின் வழியாக எதையோ தேடிக்கொண்டிருப்பது, கோபிக்கு உவப்பானதாக இருக்கிறது. இன்னொருவகையில் வளமான சமூகம், பண்பாட்டின் மீதான சவால் எனப் பீடியைப் பற்றிய பிம்பத்தைக் கோபி கட்டமைத்துள்ளார். பீடியைக் குறியீடாக்கிச் சொல்லப்பட்டுள்ள பீடி கதை, சமூகத்தின் குறியீடாகப் பீடி மாறுகிற விநோதத்தைப் பதிவாக்கியுள்ளது. புகைத்தல் என்பது வெறுமனே புகைத்தல் அல்ல என்பதுதான் கோபி சொல்ல விழைவதா? ஒரு நாளைக்கு ஐம்பத்தேழு மினி சிகரெட்களைப் புகைக்கிற மாரிச்சாமி, திடீரெனப் புகைப்பதை நிறுத்திட முயலுவது, 'இழந்த யோகம்' கதையாகியுள்ளது. மனதின் சுயக்கட்டுப்பாடு அவசியம் என்ற மருத்துவரின் ஆலோசனை அர்த்தமற்ற நிலையில்இ சாரதா, குருஜீ, மூலிகைத் தண்ணீர், யோகா எனத் தொடர்ந்த முயற்சிகளும் ஒரு நிலையில் அபத்தமாகின்றன. சாராதாவின் சிநேகம் தேவைப்படும் சூழலில், அவள் வார்தா போய்விட்டால், என்ன ஆகும்? தற்காலிகமாகக் குறைந்திருந்த சிகரெட்டுகளின் எண்ணிக்கை கூடிட வாய்ப்புண்டு. தொடர்ச்சியாகச் சிகரெட் புகைத்தல் காரணமாக ஏற்படுகிற குற்ற உணர்வும், அதிலிருந்து விடுபட வழி தேடியலைகிற மாரிச்சாமி போலத்தான், பூமியில் மனித இருப்பு உள்ளது. ஏதோவொரு காரணத்தினால்

ஏற்படுகிற பழக்கத்தில் இருந்து விடுபடுதல் சாத்தியமற்ற சூழலில், மனிதனின் வதைகள் தொடர்கின்றன.

'முடியாத சமன்' என்ற கதையாடல், முடிவற்று நீள்கிற மனப்பிறழ்வின் வலியை விவரித்துள்ளது. மனதின் நுணுக்கங்கள், தேடல்கள், கட்டமைக்கிற புனைவுகள் ஒருபோதும் வரையறைக்குட்படுவது இல்லை. உடல் போலவே மனதும் சமமற்ற நிலையில் பிறழ்வடைவது இயற்கை என்ற புரிதலற்ற சமூகத்தில், மன்நோய்க்குள்ளானவர், சபிக்கப்பட்டவராகிறார். பரந்துபட்ட சமூக வாழ்க்கையிலிருந்து விலகி அந்நியப்படவோ அல்லது உள்ளுக்குளே முடங்கிடவோ நேரிடுகிறவரின் மனவோட்டம் அளவற்றது. ராமபத்ரன் ஆழ்மனதில் பெண்ணுடல் மீதான வேட்கை எப்பொழுதும் கனன்றுகொண்டிருக்கிறது. புட்டத்தில் மயக்க ஊசி மருந்து, நெற்றிப் பொட்டுகள் கருகுமளவு மின் அதிர்ச்சி என உடல்ரீதியில் சித்ரவதைக்குள்ளாகினாலும், அவனுடைய மனநிலையில் பெரிய அளவில் மாற்றமில்லை. யதார்த்தத்தில் அவனுக்கு செக்ஸ்தான் பிரச்சினை எனக் கருதிய விமலா அவனுடன் உடலுறவுகொள்ள முயலுவது, சரியாகவில்லை. துல்லியமான பிரக்ஞை, அதனுடைய வரையறையில் இருந்து தவறினால், மனம் மீண்டும் இயல்பான நிலைக்குத் திரும்புவது ஒருவகையில் சவால்தான். சமனிலை என்பது சிதலமானபோது, அதிலிருந்து மீள்வது குறித்த பிரச்சினகளைப் படைப்பாக்கியுள்ள எழுத்துகள், சமகாலத்தின் பதிவுகள்தான்.

கோபியின் பெரும்பாலான கதைகள் பகடியான மொழியில் வெளிப்படையாக இருப்பதாகப் பாவனை செய்தாலும், வாசிப்பின் வழியாகத் திடீரெனப் புதிர் வழியில் பயணிக்கையில் விநோதமான உலகினுக்குள் சிக்கிக்கொள்ள நேர்கிறது. வாசகன் எளிமையானது என்ற புரிதலுக்கப்பால், எனக்கு என்ன நேர்ந்துள்ளது என்ற பிரேமையினால் தவிக்க நேரிடுகிறது. கோபியின் மனநோய் மனிதனிடமிருந்து எந்தவகையில் தான் வேறுபட்டவன் என்ற கேள்வி இடைவிடாமல் காதுக்குள் கேட்டுக்கொண்டிருக்கிறது. பிரதி தருகிற வாசிப்பனுபவம் என்பதற்கப்பால், வாசகன் புனைவு வெளியில் தன்னை இழந்திடுவதற்கான தோதுகள் கோபியின் கதைகளில் பொதிந்துள்ளன.

பூமியில் மனித இருப்பு போலித்தனங்களால் நிரம்பி வழிந்திடும் சூழலில், பாவனைகள் மூலம் தன்னை அடையாளப்படுத்திட முயலும் முயற்சிகளைக் கதையாக்குவதில் கோபிக்கு நிரம்ப ஆர்வமுண்டு. எளிய மனிதர்கள், உயர்தர கனவான்கள், சிறிய உயிரினங்கள் பற்றிய விவரிப்புகளின் மூலம் ஒருவகையில் அபத்தமாகிப்போன சூழலின் வெக்கை அப்பழுக்கற்றுப் பதிவாகியுள்ளது. கோபியின் நினைவுப்பரப்பில் சொல்லி மாளாத அனுபவங்கள் குவிந்திருக்கின்றன. அற்பமான விஷயம்கூட கோபியின் எடுத்துரைப்பியலினால் வேறு ஒன்றாக மாறுகிற விந்தை நிகழ்கிறது. பூமியெங்கும் பரவியிருக்கிற பூச்சிக் கூட்டங்களில் இருந்துஇ மனித ஜந்து எங்கே வேறுபடுகிறது என்ற நுட்பமான கேள்விக்கான விடை, மனித மனம் என்று சொல்ல முடியுமா? யோசிக்க வேண்டியுள்ளது. உடலுக்கு என்ன தேவை என்ற கணிக்கிற மன இயந்திரத்திற்கு என்ன தேவை என்பதைக் கண்டறிய இயலாது. எல்லாம் துல்லியமாக இருப்பதான சூழலில், திடீரென ஒரு புள்ளியில் இயக்கம் உறைந்திடும்போது என்ன செய்ய முடியும்? சமூக மதிப்பீடுகள் கட்டமைத்திருக்கிற மனிதனின் இருப்பு அர்த்தமிழக்கையில், சுயம் குறித்த கேள்விகள் தோன்றுகின்றன. பொங்கிடும் ஓர்மைகள் காரணமாகப் பேய், தேவதை, சாத்தான், கடவுள் என எப்படி வேண்டுமானாலும் நினைவு அடுக்குகளில் பதிந்து, சுய பிம்பச் சிதைவிற்குள்ளாகிடும் மனிதர்கள் பற்றிய கோபியின்

படைப்புகள், சமகாலத்தின் சிதைவுண்ட குரல்களாகும். கோபியைப் பொருத்தவரையில் விருப்பு வெறுப்பற்ற நிலையில் மனப்பிறழ்வு, மனத்தெளிவு ஆகிய இரண்டும் மனித மனதின் இரு வேறு நிலைகள் என புரிதலுடன் கதைகளை எழுதியுள்ளார். ஒப்பனைகள் அற்ற விவரிப்புகள் மூலம் கோபி புனைந்துரைக்கிற கதைகள், வாசித்து முடித்தவுடன் ஏற்படுகிற சங்கடமும் கசப்பும், சமநிலையைச் சிதலமாக்குகின்றன. ஒருவிதமான நையாண்டியுடன் எங்கும் உரத்துப் பேசாமல், சூழல் மீது நுணுக்கமாக எதிர்வினையாற்றுகிற கோபியின் புனைகதைகள், எந்தக் காலத்திற்கும் பொருத்தமானவை. இதுவே கோபி எழுத்துகளின் ஆகப் பெரிய பலம்.

**உதவிய நூல்**

1. மோகன்.சி (தொ-ஆ). கோபிகிருஷ்ணன் படைப்புகள்: (முழுத் தொகுப்பு.) சென்னை: நற்றிணை பதிப்பகம், 2012.

# நீர் மேலாண்மை புரிதலற்ற பயணத்தை நோக்கி

**முனைவர் கி. சங்கர நாரயணன்**
**உதவி பேராசிரியர்**
**தமிழ்மேம்பாட்டுச் சங்கப்பலகைத் துறை**
**சென்னைப் பல்கலைக்கழகம்**
**சென்னை**

இன்றைய காலக்கட்டம் தண்ணீரை நிலத்தங்கம் என அழைக்கும் காலமாகும். அதன் பெருமை கடந்த சில ஆண்டுகளாக உலகின் பல்வேறு பகுதி மக்களுக்குப் புரியத் தொடங்கியுள்ளது. நீரால் சூழப்பட்டது உலகம். ஆனால் குடிநீர் பற்றாக்குறை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. இயற்கையைக் குறைசொல்வதற்கு ஒன்றுமில்லை. இயற்கையைச் சரியாகப் பராமரிக்காமல் விட்டதாலும், இயற்கைச்சூழலை அதன் அமைப்புப்படிச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் போனதாலும்தான் இன்றைக்குத் தண்ணீருக்கு விலை கொடுக்க வேண்டியநிலை. ஆனால் பண்டை இலக்கியத்தில் பழந்தமிழரின் அனுபவம் மற்றும் தொழில்நுட்ப அறிவு, நீர்ப்பாதுகாப்பு முறைகள் போன்ற பதிவுகள் இடம்பெறுகின்றன. இயற்கையின் செயல்பாடுகளைக் கவனித்த பழந்தமிழர்கள் அதன் போக்கிற்கேற்ப நீர்வளத்தைப் பயன்படுத்திக்கொண்டனர்.

பழந்தமிழர்கள் நீர்வளம் குறித்த தொழில்நுட்ப அறிவில் முன்னோடிகளாகத் திகழ்கின்றனர். ‘நீரின்றி அமையாது உலகு’ என்பது உலகறிந்த உண்மை. அதனால் ஒவ்வொரு மக்களும் இயற்கையாக அமைந்த நீர்நிலைகளையும், அதன் பயன் குறைகின்ற போது செயற்கை நீர்நிலைகளையும் பயன்படுத்தியுள்ளனர். முல்லை, குறிஞ்சி நிலப்பகுதியில் அருவியும், சுனையும் இயற்கையாக அமைந்த நீர் நிலையாகும். நிலப்பகுதியில் கான்யாறே இயற்கை நீர்நிலை. மருதநிலம் நீர்வளம் சார்ந்த பகுதி. ஆறும் பொய்கையும் இங்கு அமைந்த இயற்கை நீர்நிலைகளாகும். நெய்தல் நிலம் கடல் சார்ந்த பகுதியாதலின் மணற்கேணியே இங்குள்ள செயற்கை நீர்நிலையாகும்.

சங்க இலக்கியத்தில் நீர்நிலை பற்றிய குறிப்புகள் நிரம்பக்கிடக்கின்றன. இந்நீர்நிலைகளை இயற்கை நீர்நிலை, செயற்கை நீர்நிலை என்று இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இயற்கையாகப் பெய்யும் மழையின் காரணமாகப் பெருக்கெடுத்தோடும் ஆறுகள், ஊற்றுநீர், சுனை, அருவிகள் போன்றவை இயற்கை நீர்நிலைகளாகும். மலையிலிருந்து வரும் அருவியும், மலையில் அமைந்த சுனையும் குறிஞ்சியின் இயற்கை நீர்நிலைகளாகும். குறிஞ்சிநில மக்கள் அருவி நீரைப் பயன்படுத்தித் திணை விளைவிப்பர். மலைகளில் இயற்கையாக அமைந்திருக்கும் சுனைநீர் சுவையுடையதாக இருக்கும். சுனையில் விலங்குகள் (அகம்.178.2-3) நீர் உண்ணும். சுனை நீரைப் பயிர்த்தொழிலுக்கும் பயன்படுத்துவதும் (நற்.5.1-2) உண்டு. முல்லை நிலம் நீர்வளம் குறைந்த பகுதி. பருவமழையே அந்நிலத்தின் அடிப்படை நீர்வளம். முல்லை நிலத்தின் பருவமழையால் தோன்றுவது காட்டாறு. மழைவிட்ட சில நாட்களுக்குள் காட்டாற்றின் நீர் வற்றிவிடும். காட்டாற்றின் வேகத்தால் மரங்களும், விலங்குகளும் அடித்துச் செல்லப்படுவதுண்டு.